அருளோசை

திருவள்ளுவர்
ஆண்டு 2005
வைகாசி
1974 மே

சமய பாட போதனைத் திங்களிதழ்



தமிழ்நாடு தெய்விகப் பேரவை

சென்னை-600018

சிவனடியார் வரலாறு

கழற்சிங்க நாயனார்

பரமசிவன் திருவடிகளையே பற்றுக் கோடாகக் கொண்டவர் கழற்சிங்கர். இவர் பல்லவர் குலத்து மன்னர். சிவபெருமான், திருவருளினால், வடபுலத்து அரசர்களைப் போரில் வென்று நாட்டில் அறந்தவருத நன்னெறியை வளர்த்து வந்தார்.

இவ்வாறு வாழ்ந்துவரும் நாளில், அரசியொடும், சிவாலயங்களுக்குச் சென்று தொண்டு செய்து வந்தார். திருவாரூரை அடைந்து, எம்பெருமானை வணங்கி, கோயிலை வலம் வரும் போழ்தில், அரசியார் திருமாலை தொடுக்கும் மண்டபத்தில், விழுந்து கிடந்த புதுப்பூ ஒன்றை எடுத்து மோந்து பார்த்தார். இதனைக்கண்ட செருத்துணை நாயனார் சிவபெருமான் திருமுடிகளில் ஏறவேண்டிய மலரை மோந்து பார்த்ததைக் கண்டு கோபங் கொண்டார். விரைவாக உள்ளே சென்று கருவி ஒன்றை எடுத்து வந்தார். திருமகள் போன்ற அரசியின் மூக்கைப் பிடித்து அரிந்து விட்டார். அரசி மயங்கி வீழ்ந்தாள். அப்போது கழற்சிங்கர் அங்கே வந்தார்! தம் மனைவியாகிய அரசி மூக்கறுபட்டு மயங்கி வீழ்ந்திருப்பதைக் கண்டு "இக்கொடிய செயலைச் செய்தவர் யார்?" என்று கேட்டார்.

அந்நிலையில் அங்கு வந்த செருத்துணை நாயனார், நிகழ்ந்ததை எடுத்துரைத்தார். அதுகேட்ட கழற்சிங்கர் "இத்தண்டனை போதாது, மலரை எடுத்த கையை அல்லவா முன்பு துண்டிக்க வேண்டும்" என்று கூறி, தம் உடைவாளை எடுத்து, மலரை எடுத்த மாதேவி கையை வெட்டினார். இதனைக்கண்ட சிவனடியார்கள் "அர" ஒலி எழுப்பினார்கள். இமையவர் ஆர்த்தனர். மலர் மழை பொழிந்தது.

இத்தகைய அரிய திருத்தொண்டைச் செய்த கழற்சிங்கர், நெடுங்காலம் சிவத்தொண்டு செய்து வாழ்ந்து, சிவபெருமான் திருவருளினால், செய்ய சேவடியின் நீழல் பெருகிய உரிமையாகும் பேரருள் எய்தினார்.

வையத்தில் சிவநெறி தழைத்தோங்க, தன் காதல் 'மாதேவியின் கையை வெட்டிய கழற்சிங்க நாயனார் கழலிணைகளைத் தொழுது போற்றி வாழ்வாம்.

பழ-தரும-ஆறுமுகம்

ஆனந்த ஆண்டு வைகாசித் திங்கள் 6-ஆம் நாள் (20-5-74) திங்கட்கிழமையன்று கழற்சிங்க நாயனார் திருநட்சத்திரம் வருகிறது.

அருளோசை

திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 2	ஆனந்த வைகாசி 1974 மே	ஓசை 11

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

'அருளோசை'க்கு அடுத்த இதழோடு இரண்டாண்டு நிறைவு பெறுகிறது. அடுத்த இதழுடன் சென்ற ஓராண்டில் வெளியான கட்டுரைகளின் பட்டியல் பக்கங்களுடன் வெளியிடப்பெறும். அது ஓராண்டு இதழ்களைச் சேர்த்து 'பைண்டிங்' செய்து கொள்பவர்கட்குத் துணையாக இருக்கும்.

மேலும் மூன்றாவது ஆண்டில் இன்னும் பல புதிய பொலிவுகளோடு வெளிவரும். இது தொடர்பான தங்கள் ஆலோசனைகளை எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வினாவிடைப் பகுதிக்கு நல்ல வரவேற்பிருக்கிறது. இன்னும் பல அன்பர்கள் எழுதியனுப்பலாம்; மாணவர்களை இப்பகுதிக்கு எழுதச் செய்வதன் மூலம் அவர்கள் சமய ஆர்வத்தைத் தூண்டிவிட்டு அவர்களைச் சமய நெறிப்படுத்தலாம். அவர்கள் பிற்கால வாழ்க்கை சமய நெறிப்பட்டு, ஒளி பொருந்தியதாக இருக்கும்.

வினாவிடைப் பகுதிக்கு எழுதுபவர்களும் கடிதம் எழுதும்போதும், முகவரி மாறுதல் செய்யும்போதும் சந்தா எண்களை அவசியம் குறித்தனுப்ப வேண்டும்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

"அருளோசை"

வினா விடைப் பகுதி-ஏப்ரல்-74

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு :	திரு. வே. அரங்கசாமி, அதிகாரப்பட்டி, தர்மபுரி மாவட்டம், சந்தா எண். 2725.
இரண்டாம் பரிசு :	திரு. ஹா. சக்தீதரன், தெள்ளாறு, வடஆர்க்காடு மாவட்டம், சந்தா எண். 1267.
மூன்றாம் பரிசு :	சாரங்க. பக்கிரிசாமி, கீரந்தகுடி, தஞ்சை மாவட்டம், சந்தா எண். 2840.
நான்காம் பரிசு :	திரு. எம். தங்கவேல்பிள்ளை, விக்கிரமங்கலம், திருச்சி மாவட்டம், சந்தா எண். 2051.

திருமுகம்

இனிய தோழருக்கு, உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

நாம் அனைவரும் இந்தத் தலைமுறையில் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க பணியை மேற்கொண்டிருக்கிறோம். நமது இந்து சமயம் காலங் கடந்தது. இந்தியநாடு முழுவதும் ஒரு காலத்தில் விரிந்து பரந்திருந்த சமயம்; இந்து சமயம் என்பது ஒரு பொதுப் பெயர். இந்து சமயத்திற்குள்ளேயே வேறுபாடுகளும் உண்டு. ஆனாலும் இந்த வேறுபாடுகளை விஞ்சிய ஒருமைப்பாடு உண்டு என்பதை நாம் நினைத்து மகிழவேண்டும். உலக நாடுகளில் வேறுபாடுகளின் காரணமாகவே தனித்தனிச் சமயமாகப் பிரிந்து, பின் அவற்றுக்குள் கடும் பகையும்கூட வளர்ந்திருக்கிறது. ஆனால், இந்து சமயம் அத்தகையதல்ல. இந்து சமயம் மனித குலத்தில் வேறுபாடுகளை வளர்க்காமல் ஒருமைப்பாட்டை வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டது. ஆயினும், காலப்போக்கில் மனிதகுல ஒருமைப்பாட்டை நோக்கி வளர்ந்த இந்து சமயம், தனக்குள்ளேயே பல வேறுபாடுகளுக்கு ஆளானது; அதில் இன-மொழி-சாதி-குல கோத்திர வேறுபாடுகள் கால்கொண்டன.

இந்த வேறுபாடுகளை அகற்றி நன்முறையில் நாட்டை நிறுத்த ஞானிகளும், நாயன்மார்களும், ஆழ்வார்களும் முயன்றனர். அந்தச் சான்றோர்களின் முயற்சி ஓரளவு பயன் தந்தது. ஆயினும், இந்தியாவில் கிறித்தவமதம் தோன்றவும், முஸ்லிம் மதம் தோன்றவும், நாத்திக வாதங்கள் தோன்றவும் காரணமாக இருந்த நம்முடைய சமய-சமூகத்தின் பலஹீனங்கள் முற்றாக மாற்றப்படவில்லை. இந்த வரலாற்றுப் பின்னணியோடு நாம் நம்முடைய ஆன்றோர் வழியில் நம்முடைய வாழ்க்கைப் பயணத்தையும் சமயப் பணியையும் பேரவை என்ற மைய கேந்திரத்தின் மூலம் தொடங்கியுள்ளோம்.

தமிழக வரலாற்றில் புகழ் பூத்த சங்ககாலத்தைத் தொடர்ந்து பேரிருள் கவிழ்ந்தது. அந்த இருளை அகற்றி ஒளிக்கதிர் வீசிப் புகழ் பெற்ற நூற்றாண்டு ஏழாம் நூற்றாண்டு. தஞ்சைத் தரணியில் சீகாழியில் தோன்றிய ஞானக் கதிரனைய திருஞான சம்பந்தரும், திருவாமூரில் தோன்றிய திங்களனைய திருநாவுக்கரசரும் தமிழகத்தின் வரலாற்றுக்கு விழுமிய புகழ் சேர்த்தனர்.

திருஞானசம்பந்தர் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினார். செழுந்தமிழ் வழக்கு அயல் வழக்கின் துறை வெல்ல, அருந்தொண்டாற்றினார். திருஞானசம்பந்தரின் திருத்தொண்டால் திசையனைத்தும் தென்திசையின் புகழே மேவிற்று. திருஞானசம்பந்தர் மனித குலத்

தின் வாழ்க்கை, கலை மலிந்ததாக விளங்க வேண்டுமென்று விழைந்தார். இயற்கையோடிசைந்ததாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். பெண்ணின் நல்லாளோடு கூடிவாழும் பெருநெறியைப் போற்றினர். அனைத்து உயிர்களிடத்தும் அருள் ஒழுக்கம் பூண்டொழுக வேண்டுமென்று வழிநடத்தினர். அரசு நெறிமுறை பிறழ்ந்தபொழுது நெறியில் நிறுத்தினர்.

இங்ஙனம் ஞாலமுய்ய-நாமுய்ய-சைவ நன்னெறியின் சீலமுய்ய திருவவதாரம் செய்து திருநெறிய தமிழ்மூலம் பெருநெறி தந்த திருஞானசம்பந்தரின் திருநட்சத்திரம் வரும் 6-6-74 அன்று வருகிறது.

திருஞானசம்பந்தரின் திருவடிகளைத் துணையாகக் கொண்டு, வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத் துறைவிளங்கத் திருப்பணிகள் செய்திடப் பேரவை அன்பர்களை அழைக்கின்றோம்.

அட்டைப்பட விளக்கம்

அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்

—:o:—

தெய்வச் சுருதி தமிழ்க்கன்றித்
தீட்டா நிலைமைத் தெனவுலகில்
தெரிக்குங் காழித் திருஞானச்
செம்மற் குழவிக் கருள் ஞானம்
பெய்து குழைக்க வோ முலையாம்
பெரிய மலைவாய் உறுத்துமென்றோ
பெருமான் தனையும் குழைத்தவலிப்
பெற்றியறிந்து தடுத்தோ பூங்
கையிலிலகு நகக்குறி பற்
கதுவ நோ மென்றோ தீம்பால்
கறந்து கொடுத்தாய் எனச்சகிமார்
கனிந்துபாட நகை முகிழ்க்கும்
வைவைத் தமைத்த மதர்வேற்கண்
வாழ்வே வருக வருகவே!
வளங்கூர் குளந்தைப் பதியமுத
வல்லி வருக வருகவே.

—சிவஞான முனிவர்.

சீகாழிக் குளக்கரையில் மிகுசைவத்துறை விளங்கப் புனிதவாய் மலர்ந்தமுத திருஞானசம்பந்தர்க்கு அம்மை, பொற்கிண்ணத்தில் திருமுலைப்பால் கறந்து கொடுத்தல்.



முப்புரம் செற்ற முதல்வன்

புலவர் திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

முன்னுரை :

கடவுளுக்கு உருவம் இல்லை என்று சில மதங்கள் கூறுவதுண்டு. ஆயினும், நமது இந்து மதம் கடவுளுக்கு உருவம் உண்டு என்னும் கொள்கையுடையது. கடவுள், தாம் குறித்தது ஒன்று ஆகமாட்டாத குறைவை உடையவரல்லர். அவர் நெறிப்பட நிறைந்த ஞானமும், ஐவகைத் தொழிலும் உடைய நிலைமையர்; விருப்பு வெறுப்புக்கள் இல்லாதவர். ஆதலால், அவர் உயிர்கள்மீது கொண்டுள்ள கருணையினால், அவ்வுயிர்களுக்கு நலம் புரிதற்பொருட்டுத், தாம் நினைக்கின்றபடியெல்லாம் திருவுருவங்களை எடுத்துக் கொள்ள வல்லவராவர். இறைவன் நம்மைப்போல் வினை வயத்தினால் உருவங்களை எடுப்பவர் அல்லர். நம்முடைய உருவம் எழுவகைத் தாதுக்களால் இயன்றிருப்பது, அழிந்துபடும் ' இயல்புடையது. இறைவனது திருவுருவம் இத்தகைய குறைபாடுகளை யுடையதன்று. அடியவர்களுக்கு அருள் செய்வதன்பொருட்டுத் தாம் நினைத்தபடி யெல்லாம் வடிவங்களை எடுத்துக்கொள்ளும் வல்லமை இறைவனுக்குரிய இயல்பாகும்.

"குறித்ததொன் றாகமாட்டாக் குறைவிலன் ஆத லானும்,
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்,
வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதல் இலாமையானும்
நிறுத்திடும் நினைந்த மேனி நின்மலன் அருளி னாலே."

—சித்தியார்.

மூவகை மூர்த்தங்கள் :

சிவபிரான் அவ்வப்போது எடுத்தருளிய திருவுருவங்கள் பற்பல. இத் திருவுருவங்களை எல்லாம் பொதுவாகப் போக மூர்த்தம், யோக மூர்த்தம், வேக மூர்த்தம் என்று, நூல்கள் மூன்று வகையாகப் பகுத்துரைக்கும். உயிர்களின் இம்மை வாழ்விற்குரிய உலகியல் இன்பங்களை நுகர்விப்பன, போக மூர்த்தங்களாகும். உயிர்களை மறுமை வாழ்விற்குரிய ஞான நன்னெறிகளில் செலுத்தி நலம் பெறச் செய்விப்பன, யோக மூர்த்தங்கள் எனப்படும். உயிர்களின் குற்றங்களைக் கடிந்து வினைகளைப் போக்கி மறக் கருணையினால் தண்டித்து ஆட்கொள்வன, வேக மூர்த்தங்கள் என வழங்கப்பெறும்.

"போகியாய் இருந்து உயிர்க்குப்
போகத்தைப் புரிதல் ஓரார் ;
யோகியாய் யோக மூர்த்தி
உதவுதல் அதுவும் ஓரார்;
வேகியா ணுற்போற் செய்த
வினையினை வீட்டல் ஓரார் ;
ஊகியா மூடர் எல்லாம்
உடம்பரின் ஒருவன் என்பர்."

—சித்தியார்.

வேக மூர்த்தம்

சிவபிரான் எழுந்தருளியுள்ளனவும், நமது சமய ஆசிரியர்களால் திருமுறைப் பாடல்கள் பெற்றவையுமான தலங்கள் பல. அவற்றுள், வீரட்டானத் தலங்கள் என்று சில மிகவும் சிறப்பாகப் போற்றப்பெற்று வருகின்றன. வீரத்தானம் என்னும் சொல் வீரட்டானம் என மருவி வழங்கப்பெறுகின்றது. சிவபெருமான் வீரச் செயல்கள் நிகழ்த்திய இடம் எட்டு ஆகும். ஆதலால் அவற்றை, அட்ட வீரட்டானத் தலங்கள் என்று நூல்கள் குறிப்பிடும். "அட்டானம் என்று ஓதிய நாலிரண்டும்" என்பது திருநாவுக்கரசர் தேவாரம். திருக்கண்டியூர், திருவதிகை, திருக்கோவலூர், திருக்கடவூர், திருப்பறியலூர், திருவழுவூர், திருக்குறுக்கை, திருவிற்குடி என்னும் எட்டுத் தலங்களும், அட்ட வீரட்டானம் என்று சிறப்புடன் போற்றப்பெற்று விளங்கி வருகின்றன. திருக்கண்டியூரில் சிவபெருமான் பிரமனின் தலையைக் கொய்தார். கோவலூரில், அந்தகாசுரனை அழித்தார். திருக்கடவூரில், இயமனைக் காலால் கடிந்தார். திருப்பறியலூரில், தக்கனின் தலையைப் பறித்தார். வழுவூரில், யானையின் தோலை உரித்தார். திருக்குறுக்கையில், காமதகனம் செய்தார். திருவிற்குடியில், சலந்தர வதம் புரிந்தார்.

"பூமன் சிரம்கண்டி; அந்தகன்
கோவல்; புரம் அதிகை
மாமன் பறியல்; சலந்தரன்
விற்குடி; மாவழுவூர்
காமன் குறுக்கை; கடவூர்
இயமன்; கடிகமழும்
தேமன்னு கொன்றையும் திங்களும்
சூடிதன் சேவகமே.

—தனிப்பாடல்.

சங்க நூல்கள் :

இங்ஙனம் சிவபிரான் செய்தருளிய வீரச் செயல்கள் எட்டனுள் 'முப்புரம் செற்ற முதல்வன் (திரிபுர தகனர், திரிபுராந்தகர்) என்னும் திருவுருவமும் ஒன்ருகும். சிவபெருமான், திரிபுரங்களை எரித்தருளிய வீரச் செயல் பற்றிய குறிப்புக்கள், நம்முடைய பண்டைச் சங்க கால இலக்கியங்களிலும், ஆங்காங்கே காணப்படுகின்றன.

" ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ,
ஒருகணை கொண்டு மூஎயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல,
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற"

—புறநானூறு, 55.

" திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
உமையவள் ஒருதிறன் ஆக ஓங்கிய
இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆடலும்"

— சிலப்பதிகாரம், 6 : 40-44

"தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந் திரத்தலின்
மடங்கல்போற் சினைஇ மாயம்செய் அவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூஎயிலும்
உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்"

—கலித்தொகை, 2.

" ஆறறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்துக்
கூறுமற் குறித்ததன்மேற் செல்லும் கடுங்கூளி
மாறுப்போர் மணிமிடற்று எண்கையாய் கேள் இனி

—கலித்தொகை, 1.

வரலாறு :

முன்னொரு காலத்தில் தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் அசுரர்கள் மூவர் வாழ்ந்து வந்தனர். அவ்வசுரர்கள் மூவரும் பிரமதேவரை நோக்கிப் பெருந்தவம் புரிந்தனர். பிரமதேவர்பால் "எமக்குப் பொன் வெள்ளி இரும்பினால் அமைந்து மதில்கள் பொருந்திய முப்புரம் மூவுலகங்களிலும் வேண்டும். அவை ஆயிரம் ஆண்டுக்கு ஒருமுறை, யாம் விரும்பிய இடத்திற்குப் பெயர்தல் வேண்டும். அவைகள் சிவபெருமானாலன்றி, வேறு எவராலும் அழியாதனவாக விளங்குதல் வேண்டும்" என வரம்பெற்றனர். அவ்வரத்தின் ஆற்றலால், தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெருங் கொடுமைகள் செய்து வந்தனர். அதனால் வருந்திய தேவர்களும் முனிவர்களும், சிவபிரானிடம் சென்று முறையிட்டுக் கொண்டனர். சிவபெருமான் திரிபுரா அசுரர்களை அழித்துத் தேவர்களைப் பாதுகாக்க திருவுள்ளம் கொண்டான்.

பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்களைச் சக்கரங்களாகவும், வேதங்கள் நான்கையும் நான்கு குதிரைகளாகவும், பிரமதேவன் தேர்ச் சாரதியாகவும், மேரு மலையை வில்லாகவும், வாசுகியை நாணாகவும் திருமாலை அம்பாகவும் அவ் அம்பின் நுனியை அக்கினி தேவனாகவும் கொண்டு திரிபுர அசுரர்களின்மீது போருக்குப் புறப்பட்டார். அந்நிலையில் 'எம்மையெல்லாம் துணையாகக் கொண்டன்றோ இவர் திரிபுர அசுரர்களுடன் போர் செய்தற்குச் செல்லுகின்றார். எங்கள் எல்லோருடைய துணையும் இல்லாமல் இவர்மட்டும் தனியே சென்று திரிபுர அசுரர்களை எதிர்த்துப் போரிடுதல் இயலுமோ?' என தேவர் சிலர் தம் மனதுக்குள் எண்ணிக் கொண்டு செருக்குற்று நின்றனர். உள்குவார் உள்கிற்றெல்லாம் உயிர்க்குயிராய் உடனிருந்து உணர்கின்ற சிவபெருமான், இதனை அறிந்து ஒரு சிறிதே புன்முறுவல் பூத்தார். அவ்வளவில் முப்புரங்களும் எரிந்து அழிந்தன, என்பது வரலாறு

சிவபெருமான் ,முப்புரங்களை எரித்து அழித்த வரலாறு, நம்முடைய தேவாரத் திருமுறைகளில் ஆங்காங்கே மிகுதியாக எடுத்துப் போற்றப் பெற்றுள்ளன. நம் தமிழகத்திலுள்ள திருக்கோயில் சிற்பங்களிலும், இவ்வரலாறு பெரிதும் அழகுற ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கக் காணலாம். திருவதிகை, திருவிற்கோலம், திருஅச்சிறுபாக்கம் என்னும் சிவத்தலங்கள், சிவபெருமான் திரிபுரம் செற்ற வரலாற்றோடு தொடர்புடைய தலங்களாகப் போற்றப்பெறுகின்றன.

சுவைமிகு கவிதைகள் :

சிவபெருமான் முப்புரங்களைத் தன் புன்முறுவலால் எரித்த வரலாறு புலவர்கள் பலரால் சொற்பொருள் சுவை மிகும்படி கற்பனை வளம் பொலிய பெரிதும் புகழ்ந்து போற்றப்பட்டுள்ளது. இறைவன் எல்லாம் வல்லவன்; கூட்டொருவரை வேண்டாக் கொற்றவன்! அவனுக்கு நம்மைப்போலத் தேர், குதிரை, வில், அம்பு முதலிய கருவிகள் வேண்டுவதில்லை. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பது பழமொழி. ஆதலின் தன்னுடைய புன்முறுவல் கொண்டே திரிபுரங்களைச் சிவபெருமான் எளிதாக எரித்து அழித்தான். சங்ககாலத்தில் "பேரெயில் முறுவலார்" எனப் புலவர் ஒருவருக்குப் பெயர் வழங்கியது. திரிபுரம் எரித்த சிவபெருமானின் பெயரையே அப்புலவர் பெற்றிருந்தார் எனக் கருதலாம்.

"சொல்லுக் கினிய கழுக்குன்றரே !
உமைச் சொல்ல என்றால்,
அல்லற் பிழைப்புப் பிழைத்து
விட்டீர்; முப் புராதியர்மேல்
வில்லைக் குனித்தெய்ய மாட்டாமல்,
நீர் அந்த வேளை தனில்
பல்லைத் திறந்து விட்டீர் !
இதுவோநும் படைத்தொழிலே"

—தனிப்பாடல்.

நான் என்ருல் நஞ்சிருக்கும், நற்சாபம் கற்சாபம்
பாணம்தான் மண்தின்ற பாணம்காண் அம்மானை
பாணம்தான் மண்தின்ற பாணமே ஆமாயின்
சேஞர் புரம்எரித்த சேவகம்என்? அம்மானை
சேவகத்தைச் சொல்லிச் சிரிப்பன் ரே? அம்மானை

—தில்லைக்கலம்பகம்.

என்பன போல வரும் பாடல்கள் பலவும், இயைபுடைமை பற்றி இங்கு அறிந்து சுவைத்துணரற்பாலனவாகும்.

தத்துவ நுட்பம் :

"புராணங்கள் உயரிய தத்துவ நுட்பங்களைக் கதைகள் அல்லது புனைகதைகள் வாயிலாக அழகும் சுவையும் அமைய நமக்கு அறிவுறுத்து கின்றன. கடினமும் சிக்கலும் மிக்க, உயரிய தத்துவ நுட்ப உண்மை களைப் பெரும்பாலும் பொதுமக்களின் எளிய உணர்விற்கும் உள்ளத்திற் கும் எட்டிப் பதிந்து புலனுகும்படி, புராணங்கள் சிறந்த பணிபுரிகின் றன. கல்வியறிவற்ற பாமரமக்களுக்குத் தத்துவக் கலையின் கருத்து நுட்பங்களில் ஆவலும் ஆர்வமும் ஏற்படச் செய்யும் கடினமான வேலை யினை, இந்தியநாடு எளிதாகச் செய்து முடித்து வெற்றி கண்டுள்ளது.* " அம்முறையில் சிவபெருமான் முப்புரம் செற்ற வரலாறு கூறும் புராண கதையும், சிறந்ததொரு தத்துவ நுட்பத்தை உள்ளடக்கிக் கொண்டிருக் கிறது.

" அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே "

எனவரும் திருமூலர் திருமந்திரம், நம்முடைய தூலம், சூக்குமம், காரணம் என்னும் மூவரை உடல்களையும், இவற்றிற்குக் காரணமாக உள்ள ஆணவம். கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் அழித் தொழித்து இறைவன் நமக்கு அருள்செய்யும் திறனையே, இவ்வரலாறு அழகியதோர் உருவமாக அறிவுறுத்துகின்றது என விளக்கியிருத்தல், நாம்பெரிதும் போற்றி மகிழத்தக்கதாகும். ஆதலின், முப்புரம் செற்ற முதல்வனைப் போற்றி, நாம் நம்முடைய மும்மலங்களேபும், அவற்றின் காரியமாகிய தீய வினைவுகளையும் போக்கிக் கொண்டு, நலம்பெற முயல்வோமாக!

---

* "The Puranas contain the truth dressed up in myths and stories to suit the weak understanding of the majority. The hard task of interesting the multitude in the metaphysics is achieved in India."

—*Dr. S. Radhakrishnan.*



தெய்வச் சேக்கிழார்

க. கலியாணம், எம்.ஏ., டிப். எக்கான்.,

உலகில் தலைசிறந்த புலவர்களில் ஒருவர் இத்தாலி நாட்டு வரசீலர் ((Virgil) என்பவர். அவர் கி.மு. முதல் நூற்றாண்டில் அதாவது இற்றைக்குச் சற்றேறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். அப்போது உரோமாபுரியிலிருந்து செங்கோலோச்சிய அகஸ்டஸ் சீசர் என்ற மன்னனுக்கு உற்ற நண்பராகவும் இருந்தார். அரசனுடைய தூண்டுகோலுக்கும் வேண்டுகோளுக்கும் இணங்கி ஈனியஸ் என்பவனின் வீரச் செயல்களைப்பற்றிக் காவியம் எழுதத் தொடங்கினார். புலவர் பெருந்தகையாரை நேபிள்ஸ் என்ற நகரில் இருக்க வீடு முதலியவை அமைத்துக் கொடுத்தான். நூலகத்தில் மிக்க ஊக்கம் காட்டினான். அவ்வப்போது கடிதவாயிலாகக் காவியத்தின் வளர்ச்சியை அறிந்துகொண்டான். காவியம் முடிந்ததும் அவரையே அரங்கேற்றம் செய்யச் சொன்னான். நெஞ்சை உருக்கும்படியான ஒரு சோகமான நிகழ்ச்சியைக் கவிஞர் பாடும்போது மன்னனின் உடன்பிறந்த ஆக்டோவியா என்ற இளவரசி மயங்கி விழுந்து விட்டாள். புலவரின் கவிநலத்தைப் பாராட்டி 2100 பொற்காசுகளை வழங்கினாள். அரசனும் புலவரும் உரோமாபுரியிலுள்ள நாடகக் கொட்டகைக்கு நாடகம் பார்க்க ஒருநாள் சென்றனர். நாடகத்தொடக்கத்தில் வரசீலர் எழுதிய சில பாடல்களை நடிகர் பாடினர். அவ்வளவில் மக்கள் வரசீலர் வந்திருப்பதை யறிந்து எழுந்து நின்று வணக்கம் செலுத்தினர். என்னே அந்த மகாகவிக்கு இருந்த பெருமை!

நம் செந்தமிழ் நாட்டில் ஏறக்குறைய இதே போன்ற வரலாறு நிகழ்ந்தது. சான்றோர் உடையது என ஆன்றோர் போற்றும் தொண்டை நன்னாட்டின் குன்றத்தூரில் சேக்கிழார் பிறந்தார். இளமையிலேயே கல்வி அறிவு ஒழுக்கங்களால் சிறந்து விளங்கினார். சோழமன்னன் இரண்டாங் குலோத்துங்கன் அவரை முதல் அமைச்சராக அமர்த்தினான். கற்பனைக் கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்த மன்னனுக்கு அடியார்கள் வரலாறுகளைச் சொன்னார். அவற்றை அவர் நூலாக இயற்றித் தருமாறு வேண்டிக் கொண்டான். சிதம்பரத்தில் தங்கியிருந்து நூல் எழுதவேண்டியதற்கான வசதிகளைச் செய்தான். அவ்வப்போது ஏவலர் மூலம் ஓலை அனுப்பி நூலின் முன்னேற்றம் பற்றித் தெரிந்து கொண்டான். நூல் எழுதி முடிந்ததை யறிந்து தலைநகரிலிருந்து பரிவாரம் சூழத் தில்லைக்குச் சென்றான். அவரையே காவியத்தை அரங்கேற்ற வேண்டினான். சேக்கிழார் அதற்கு இசைந்து சம்பந்தப் பெருமான் ஞானப்பாலுண்ட திருநாளான

சித்திரைத் திருவாதிரையில் அரங்கேற்றம் தொடங்கி அடுத்த திருவாதிரையில் முடித்தார். அரசன் அவரை யானைமேல் ஏற்றி, தானே சாமரை வீசி, ஊர்வலம் செய்து, அவருக்குத் "தொண்டர்சீர் பரவுவார்" என்று பட்டம் சூட்டிப் பாராட்டினான். அரசன் வேண்டிக் கொள்ள காவியம் எழுதியது, அரங்கேற்றம் செய்து கேட்டது இவை சேக்கிழார், வரசீலர் ஆகியோரின் வரலாறுகளில் பேரொற்றுமையுடன் விளங்குவதைக் காண மட்டற்ற மகிழ்ச்சியுண்டாகிறது.

இருபெரும் புலவர்களைத்தான் ஆன்றோர்களால் தெய்வ என்ற அடைமொழி கொடுத்துப் பேசப்பெறுகிறது. ஒருவர் தெய்வப்புலவர் திருவள்ளுவனார்; மற்றவர் தெய்வச் சேக்கிழார். "தெய்வமணக்கும் செய்யுளெலாம்", "தெய்வச் சைவர்" என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் "சேக்கிழார் பிள்ளைத்தமிழ்" என்ற நூலில் போற்றிப் புகழ்கிறார். சேக்கிழார் என்பது குடிப்பெயர். தாய்தந்தையர் இட்ட பெயர் அருள்மொழித்தேவர். திருமழபாடிக் கோயில் கல்வெட்டு ஒன்று குன்றத்தூர்ச் "சேக்கிழான் மாதேவடிகள் இராமதேவனான உத்தமசோழப் பல்லவராயன்" என்று கூறுகிறது. இவர் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இரண்டாங்குலோத்துங்கசோழன் (கி.பி. 1133-1150) ஆட்சிக்காலத்துக்குச் சற்றுமுன் பின்னாக வாழ்ந்தவர்.

இவர் படைத்த பெரியபுராணம் சைவமுதற் காவியம். திருவருட் காவியம் என்பார் திராவிடப் பிரகாசிகையாசிரியர். நூலில் இரண்டு காண்டங்களும், பதின்மூன்று சருக்கங்களும், 4286 பாடல்களும் உள்ளன. அதன் சிறப்பியல்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

இது ஒரு உலகப் பொதுநூல். மகாவீரர், புத்தர், ஏசுநாதர், முகம்மது நபி முதலியர்களின் உயர்ந்த இலட்சியங்களையும் கொள்கைகளையும் பெரியபுராணத்தில் வரும் அடியார் பலரின் வரலாறுகளில் காணலாம். பலவேறு சாதியினர், பலகாலத்தவர், பலதொழில் செய்தவர் முதலிய அனைவரையும் அரசன் முதல் ஆண்டிவரைச் சமமாக வைத்துள்ளார். மிக உயர்ந்தோர்-மிகத்தாழ்ந்தோர் என்ற பாகுபாடில்லாமல் ஒரே தொண்டர் குலமாகப் பாவிக்கிறார்.

அகத்திய பகத விலாசம, உபமன்னிய பக்த விலாசம் என்ற வடமொழி நூல்களின் தமிழ்மொழி பெயர்ப்பு என்று கூறுவது சரியன்று. அவையிரண்டும் இந்நூலுக்குக் காலத்தால் மிகவும் பின் தோன்றியவை. பெரியபுராணம் ஒரு முதல் நூல். சுந்தரரின் திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி இவற்றைக் கொண்டு எழுதப்பெற்ற "திருத்தொண்டர்" புராணம் மூவகை நூல்களுள் விரி நூலாகும்.

காவிய உறுப்புக்கள் எல்லாம் அமைந்த ஒரு சிறந்த காவியம். காவியத்தலைவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். "மூலமான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராய் இந்த ஞாலமுய்ய எழுந்தருளும் நம்பிதம்பிரான் தோழர்," என்கிறார். புராணத்தில் முதல், இடை, கடையில் சுந்தரர் வரலாற்றைக் கூறி பல அடியார்களின் வரலாறுகளையும் அதனுட்படுத்திக் கூறியிருப்பதால் பேரிதிகாசம் என்றும் கருதுகின்றனர். "பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப்" பாடப்பெற்ற பக்திப்பெருநூல், சுருங்கச்

சொல்லல், அமங்கலச் சொற் புணராமை முதலிய அழகுகளுடன் இலக்கிய நயம்பெற அமைந்த விழுமிய நூல். தாழ்ந்த வகுப்பினரான திருநாளைப் போவார், திருநீலகண்டயாழ்ப்பாணர், கண்ணப்பர் முதலியவர்களை ஐயரே என்றழைத்த முற்போக்குக் கவிஞர். ஏன் ? புரட்சிக் கவிஞர் என்றே கூறலாம்.

சங்ககாலப் புலவருக்குப்பின் பெண் பெருமை பேசுவதில் ஈடுமெடுப்பு மற்றவர் சேக்கிழார். ஒரு நாட்டின் நாகரிகத்திற்கு அளவுகோல் அந்த நாட்டிலுள்ள பெண் மக்களின் பண்பாடுதான் என்று அறிஞர் கூறுவர். எடுத்த எடுப்பிலேயே தடுத்தாட்கொண்ட புராணம் முதற் செய்யுளில் "மங்கையர் வதன சீதமதி இருமருங்கும் ஓடிச் செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு" என்று பெண்கள் அழகை வைத்து நாட்டு வளப்பம் கூறுகிறார். பெண்களை அவர் என்றே கூறுவார். சிறுத் தொண்டர் வீட்டுப் பணிப்பெண்ணை "சந்தனமாம் தையார்," "சந்தனத் தார் என்னும் தாதியார்" என்று கூறுவாருனால் வேறு சான்றும் வேண்டுமோ !

பெரியபுராணம் சிறந்த வரலாற்று நூல். அவர் பாடியில்லாவிட்டால் பல மன்னர் முதலியவர்களின் வரலாறுகள் தெரியாமலேயே மறைந்து போயிருக்கும். சிற்பங்கள், கல்வெட்டுக்கள், ஓவியங்கள் முதலியவற்றை ஆராய்ந்து செம்மைபட நூலை இயற்றியுள்ளார். தான் அறிந்ததை அறிந்தபடி எழுதியிருக்கிறார்.

இசை, நடனம், நாடகம், அரசியல் முதலிய பல கலைகள் பொதிந்துள்ள பல்கலைக்களஞ்சியம். யார் யார் எப்பொருளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினாலும் அவற்றை அந்நூலில் காணலாம்.

சேக்கிழார் திருவுள்ளம் : குன்றை முனிவர் உயர்ந்த நன்றியுள்ளம் படைத்தவர். "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்த இறைவனுக்கு நன்றி வணக்கம் செலுத்துமுகத்தான் "உலகெலாம்" என்று தொடங்கி, "உலகெலாம்" என்று முடித்து, நடுவில் சிறந்த 13 இடங்களில் "உலகெலாம்" என்று கூறியிருக்கிறார். இனி, கதையெழுத மூலகாரணமாயிருந்த சுந்தரரைக் காவியத்தலைவராக்கியுள்ளார். அம்மட்டோ! ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் நம்பியாரூரரின் அற்புதச் செயல்களை விளக்கும் துதிப்பாடல்களை அமைத்திருக்கிறார். புராணம் பாடத் தூண்டுகோலாயிருந்த மன்னன் "சென்னி அபயன் குலோத்துங்கனை" பத்து இடங்களில் வைத்துப் பாராட்டியிருக்கிறார். பரந்த அறிவு, விரிந்த நோக்கம், உயர்ந்த எண்ணம் முதலியவை அவரிடம் காணப்பெற்றாலும் பணிவு மனப்பான்மையுடையவர். "தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகை முன் பணித்த திருவாளன் வாசமலர் மென்கழல் வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்" என்று அடக்கமாக பிறப்பிற்கே வணக்கங் கூறிய பெருந்தகையார்.

நன்றியுள்ளம் மிகப்படைத்த சேக்கிழார் பெருமானின் திருநட்சத்திரம் நாளது வைகாசிப் பூசம் (26-5-1974) அன்று வருகிறது. அந்நன்னாளில் அவர் புகழ்பாடி, விழாக் கொண்டாடி நாம் எல்லாம் மகிழ்வதே நாம் அவருக்குச் செலுத்தும் நன்றிக் கடப்பாடாகும். குன்றை முனிவர் புகழ் குவலயம் எங்கும் ஓங்குக.

திருமாலடியார்

இராமாநுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், பி.ஏ., பி.ஓ.எல்.

(10)

திருப்பதி-திருமலைமேல் திருவேங்கடவனுக்குத் திருமாலை சாத்தித் தொண்டு செய்துவரும் அனந்தாழ்வானின் செயல்களை இராமாநுசர் கேள்வியுற்றார். தாமும் விரைவில் திருமலைக்குச் செல்ல விரும்பினார். தாம் உபதேசித்து வந்த திருவாய்மொழியின் பொருள்களை விரைவிற் கூறி முடித்தார்.

இராமாநுசர் பின்பு திருவரங்கன் திருத்தாளிணைகளை வணங்கி வழிபட்டு அவருடைய திருவருளை முன்னிட்டுக் கொண்டு திருமலைக்குப் புறப்பட்டார். வழியில் திருக்கோவலூர், காஞ்சிபுரம் முதலான திருத் தலங்களைத் தரிசித்தார். காஞ்சியில் திருக்கச்சிநம்பிகளின் மடத்துக்குச் சென்று வழிபட்டுப் பின்பு வரதராசப் பெருமாளையும் வணங்கித் தம் சீடர்களுடன் திருப்பதிக்குச் சென்றார். இடைவழியில் பாதை சரியாகத் தெரியாமல் திகைத்தார். அப்பொழுது உடன் வந்த சீடர்களில் ஒருவர் அங்கு ஏற்றம் இறைத்துக் கொண்டிருந்த ஒருவனை நோக்கி "ஐயனே! திருமலைக்குச் செல்லும் வழி யாது? நீ அறிவாயோ?" என்று கேட்டார்.

அந்த ஏற்றக்காரனும் தன் வேலையை நிறுத்திவிட்டுச் சிறிது தூரம் இவர்களுடன் வந்து திருமலைக்குச் செல்லும் வழியை நன்கு தெரிவித்துத் தன் இடம் சென்றான். உடனே இராமாநுசர் அவ்வேற்றக்காரனை வணங்கிப் போற்றினார். உடன் வந்த சீடர்களும் வணங்கினார்கள். ஏற்றக்காரனோ மிகவும் மனம் பதறி இராமாநுசரை நோக்கி "பெரியவர்களாகிய நீங்கள் இந்த எளியவனை வணங்குதல் தகுமோ?" என்று கண்ணீர் மல்கக் கேட்டான். இராமாநுசர் "யாங்கள் உமக்கு முன் ஓர் உதவியும் செய்திலோம்; அங்ஙனம் இருக்கவும் நீர் எங்கட்கு இப்பேருதவியைச் செய்தீர். ஆதலால் நாம் உம்மை வணங்கினோம்" என்றார், இராமாநுசருடைய இச்செயல், திருவேங்கடத்து எம்பெருமானைச் சேவிக்க வேண்டுமென்பதிலுள்ள ஆர்வத்தை நன்கு வெளியிடுகின்றதன்றோ!

இவ்விதம் வழிகேட்டறிந்த இராமாநுசரும் அவருடைய சீடர்களும் சிலநாட்களில் திருமலையின் தாழ்வரையை அடைந்தனர். கீழைத்திருப் பதியில் கோவிந்தனையும், மற்றும் ஆழ்வார்களையும் வணங்கித் திரு மங்கை மன்னன் திருமலையில் அடியிட்டு ஏறுவதற்கு அஞ்சி, ஏறுமல் கீழே இருந்து கொண்டே ஞானக் கண்ணுல் திருவேங்கடவனைக் கண்டு வணங்கிப் பாடினமையை அறிந்து தாமும் சீடர்களுடன் மேலே செல்ல மனமின்றிக் கீழேயே மடத்தில் தங்கியிருந்தார்.

இராமாநுசர் தம் சீடர்களுடன் திருமலையின் தாழ்வரையில் தங்கி யிருக்கும் செய்தி அனந்தாழ்வானுக்குத் தெரிந்துவிட்டது. உடனே இராமாநுசரைக் காணவேண்டுமென்ற பேரவாவினல் கீழிறங்கி வந்தார். வேரற்ற மரம் போலே இராமாநுசரை வீழ்ந்து வணங்கி ஞர். "மலைக்கு எழுந்தருளி அடியேங்களை உய்விக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். இராமாநுசரோ திருமங்கை மன்னன் போன்ற ஆழ்வார்கள் மலையை மிதியாமையாலே நாமும் ஏறிவரமாட்டோம்" என்று பதில் கூறினுர். அதற்கு அனந்தாழ்வார், "அப்படியாயின் இனி நானும் மலைக்குச் செல்லப் போவதில்லை; மற்றவர்களையும் மலை மீதேற அனுமதிக்கப் போவதில்லை" யென்று கூறினுர். உடன் வந்திருந்த திருமால் தொண்டர்களெல்லாம், "இப்படி யாருமே மலை மீதேருவிட்டால் வானோர்க்கும், மண்ணோர்க்கும் சேம வைப்பாய் மலைமேல் எழுந்தருளி யிருக்கும் அம் மலையப்பனைக் கண்டு வணங்கவும், தொண்டினைச் செய்ய வும் அங்கு யார்தானிருக்கிருர்கள்? ஒருவரும் இல்லையே! ஆதலால் இராமாநுச முனியாகிய தேவரீர் மலைமீதேறி வந்தால்தான் இவ்வுலகி லுள்ள மற்ற மக்களும் மலைமீதேறித் திருவேங்கடவனை வணங்குவார் கள்" என்று சொல்லி வேண்டிக் கொண்டார்கள்.

திருமாலடியார்களின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல் இராமாநுசரும் அனந்தாழ்வான் முதலான சீடர்கள் புடைசூழத் திருமலையின் மீதேறினுர். அம்மலையின்மீது ஏறுங்கால் இடையில் ஓடும் கானுறுகளையும், தண்ணிய சுனைகளையும் கண்டார். வண்டுகள் நறுமணமலர்களின் தேனை உண்டு களித்துப் பாடுவதையும் கேட்டார். வானளாவ உயர்ந்து காட்சியளிக்கும் சந்தனம், தேக்கு, அகில், அசோகு போன்ற மரங்களையும் கண்டு களித்தார். "மந்தி பாய் வடவேங்கட மாமலை" என்ற ஆழ்வாரின் பாடலுக்கு ஏற்ப மந்தியும் கடுவனுமாகிய குரங்குகள் இங்குமங்கும் தாவிக் கனிகளை யுதிர்ப்பதைக் கண்டார்.

அங்கு மதவேழம், தன் பிடியாகிய பெண்யானைக்கு அருகிலிருந்த இளமூங்கிற் குருத்தினைத் தேனில் தோய்த்துக் கொடுத்துக் களிக்கும் காட்சியையும் கண்டார். படியேறிச் செல்லும் மக்கள் கூட்டத்தினர் எழுப்புகின்ற கோவிந்த நாம ஒலிகளைத் தம் செவியாறக் கேட்டு மகிழ்ந்து கொண்டே சென்ருர். இவ்விதம் இயற்கை யெழில்களிலெல்லாம்

இறைவனைக் காண்பது போன்ற உணர்வோடு எம்பெருமானாராகிய இராமாநுசர் திருமலையின் மீதேறிச் சென்றார். அங்ஙனம் வந்து கொண்டிருக்கும் இராமாநுசரின் வருகையை அறிந்த பெரிய திருமலை நம்பிகள் திருவேங்கடவனின் துளசி, தீர்த்தம் முதலிய அரும்பொருள் களைக் கொண்டு வந்து இராமாநுசருக்கு அளித்து எதிர்கொண்டு வரவேற்றார். இராமாநுசரும் பெரிய திருமலைநம்பிகளைப் பணிந்து "தாங்கள் இங்கு வரவேண்டுமா? சிறியவராகிய யாரேனும் ஒருவரை அனுப்பலாகாதோ?" என்று வினவினார். அதைக்கேட்ட பெரிய திருமலை நம்பிகள் "இத்திருமலையில் ஆராய்ந்து பார்த்தபொழுது என்னைவிடச் சிறியார் யாரையும் கண்டிலேன்" என்று பதில் கூறினார். இராமாநுசர் அதைக் கேட்டு வியப்படைந்தார்.

திருமலையின் மீது அப்பனுக்குத் தொண்டாற்றி வரும் ஏகாங்கிகளும், சீயர்களும் மற்றும் பல வைணவப் பெருமக்களும் இராமாநுசரைத் தண்டனிட்டு வணங்கினர். இராமாநுசரும் அனைவரும் புடைசூழத் திருமதிலை வலம் வந்து, கோனேரியில் நீராடிப் பன்னிரண்டு திருமண் காப்புக்களையும் அணிந்துகொண்டார். பின்பு அத்தலம் வராகத் தலமாகையால் முதலில் ஞானப்பிரானாகிய அந்த ஆதிவராகப் பெருமானைச் சேவித்துக்கொண்டு, அனந்தாழ்வாரால் பராமரிக்கப்படும் தம் பெயரால் அமைந்துள்ள இராமாநுச நந்தவனத்தையும் குளிரப் பார்த்துப் பின்பு கோவிலுக்குள் சென்றார்.

திருக்கோயிலின் உட்சுற்றாகிய பிராகாரத்தை வலமாக வந்து ஆனந்த விமானத்தைக் கண்டு தொழுதார். பெரிய திருவடி, சிறிய திருவடி என்னும் கருடாழ்வானையும் அனுமாரையும் தொழுது திருவேங் கடவனின் கருப்பகிரகத்தின் வாயிலை அடைந்தார். அங்குள்ள திருப்படி யாகிய குலசேகரன் படியைக் கைகளால் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டார். மூவுலகும் போற்றும் அப்பனாகிய அம்முதல்வனைத் திருவடி முதல் திருமுடிவரை சேவித்து கண்களில் நீர் பெருக, உடம்பில் மயிர்க்கூச்செறிய ஆழ்வாரின் அமுதத் தமிழாலே பரவிப் போற்றினார்.

உலகமுண்ட பெருவாயா
உலப்பில் கீர்த்தி யம்மானே
நிலவும் சுடர்சூழ் ஒளிமூர்த்தி
நெடியாய் அடியேன் ஆருயிரே
திலத முலகுக் காய்நின்ற
திருவேங் கடத்தெம் பெருமானே
குலதொல் அடியேன் உனபாதம்
கூடு மாறு கூறாயே.

என்றும்,

அகல கில்லேன் இறையுமென்
றலர்மேல் மங்கை உறைமார்பா
நிகரில் புகழாய் உலகமூன்
றுடையாய் என்னை ஆள்வானே
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே
புகலொன் றில்லா அடியேனுன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.

(திருவாய்மொழி)

என்றும் சங்கத் தமிழாலே போற்றி வணங்கினர். பின்பு பெரிய திருமலை நம்பிகளின் கட்டளைக் கிணங்க அம்மலைமேல் மூன்று நாட்கள் தங்கியிருந்தார். மூன்றும் நாள் பெரிய திருமலை நம்பிகளும் மற்ற வைணவர்களும் சூழக் கீழே இறங்கி வந்து பெரிய திருமலை நம்பிகளின் திருமாளிகையிலே தங்கினர். அங்குக் கலைக்கோயிலாகத் திகழும் அப்பெரிய திருமலைநம்பியின் திருமாளிகையில் ஓராண்டுகாலம் வான்மீகிராமாயணத்தைப் பொருளோடு அவரிடம் பாடம் கேட்டார். அங்கு ஏற்கனவே தங்கியிருந்த கோவிந்தரும் இராமாநுசரை வணங்கிப் போற்றினர்.

(தொடரும்.)

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் புராணம்

கொற்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய பதவுரையும்

பிரதி செய்தவர்: சேக்கிழார்தாசன் இராமசேஷன்

தில்லைமா நகர் வாழவாழ்தவ சிந்தையந்தண ராறைஞ்ஞூ
றல்லதும்பல மடபதித்தவ ராசரிக்கையி லுள்ளபேர்
எல்லையில்லவ ரியாவருங்களி கொளவிளங்கச ரீரிவாக்
கொல்லைவந்தெழ வனைவருங்கர முச்சிவைத்துள முருகினர். 32

(இ-ள்): தில்லைமா நகர் வாழ வாழ்தவசிந்தை யந்தணராறைஞ்ஞூறல்லதும்-தில்லைமா நகரமானது வாழும்படி நிலைபெற்றுள்ள தவசிந்தையுடைய மறையவர்கள் மூவாயிரவர்களும் இவர்களல்லாமலும்; பலமடபதித்தவராசரிக்கையிலுள்ள பேரெல்லையில்லவரி யாவரும்-அனந்தம் மடபதிகளும் தவாசிரமத்திலுள்ளவர்களுமாகிய எண்ணிறந்தவர் யாவரும்; களிகொள விளங்கசரீரி வாக்கொல்லை வந்தெழ-களிப்படையும்படி வெளியே எழுந்து அசரீரி வாக்கானது விரைவுடன் உண்டான போது; அனைவருங்கரமுச்சி வைத்துளமுருகினர்-யாவரும் இரண்டு கைகளையும் உச்சியின்மீது அஞ்சலியாகக் குவித்துக் கொண்டு மனமுருகினார்கள். (எ-று).

உள்ளலார்புர நீறெழக்கணை யொன்றுதொட்டுயர் மன்றில்வாழ்
வள்ளலார்திரு மாலையுந்திரு நீறுமெய்ப்பரி வட்டமும்
எள்ளலாரல ரென்றுசேவையர் காவலர்க்கிவை யினிதளித்
தள்ளலார்வய னீடுதில்லையி லனைவருங்களி கொண்டபின். 33.

(இ-ள்): உள்ளலார் புரநீறெழக்கணை யொன்றுதொட்டு-பகைவர் புரங்கள் நீருகும்படி ஒரு கணையை ஏவி; உயர்மன்றில் வாழ் வள்ளலார்-சிறப்புள்ள சிற்சபையினிடத்து எழுந்தருளியிருக்கின்ற நடேசப் பிரானுக்கணிந்த; திருமாலையுந் திருநீறு மெய்ப்பரி வட்டமும் இவை-திருமாலையும் திருநீறும் மெய்ம்மையான திருப்பரிவட்டமும் ஆகிய இவைகளை; எள்ளலாரலரென்று சேவையர் காவலர்க்கினிதளித்து-தரிப்பதற்குத் தக்கவரென்று சேக்கிழார் நாயனார்க்கு அன்புடனளித்து; அள்ளலார் வயனீடு தில்லையிலனைவருங்களி கொண்டபின்-சேறுபொருந்திய வயல்வளமிக்க அத்தில்லையின்கண் யாவரும் களிப்பினையடைந்த பின்னர். (எ-று).

சேவைகாவலர் தொண்டர்சீருரை செய்வதற்குயர் செய்யுள்முன்
மூவரோதிய திருநெறித்தமி ழாதலால்வரன் முறைமையால்
யாவரும்புகழ் திருநெறித் தலைவரைவணங்கி யிணங்கிமெய்த்
தாவருஞ்சிவ சாதனங்க டரித்துநீறு பரித்தரோ. 34

(இ-ள்): சேவைகாவலர் தொண்டர் சீருரை செய்வதற்கு-சேக்கிழார் நாயனர் அடியார்களது சிறப்பை எடுத்துக் கூறுவதற்கு; உயர் செய்யுள்-உயர்ந்த முன்னூல்; முன் மூவரோதிய திருநெறித் தமிழாதலால்-முற்காலத்தில் திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய மூவரும் ஓதியருளிய திருநெறித்தமிழ் வேதமாதலால்; வரன்முறைமையால்-வரலாற்று முறையே; யாவரும் புகழ் திருநெறித் தலைவரை வணங்கி-அனைவரும் துதிக்கின்ற அம்மூவரையும் வணங்கி; இணங்கி-அவ்வடியவர்களுக் கடிமை பூண்டு; மெய்த்தாவருஞ் சிவசாதனங்கடரித்து நீறுபரித்து-மெய்ம்மையோடு கேடின்றி விளங்கும் சிவசாதனங்களைத் தரித்துக் கொண்டு திருநீறணிந்து. (எ-று). அரோ-அசை.

சிவசாதனங்களாவன: முண்டனம், குண்டலம், சிரமாலை, கரமாலை, தாழ்வடம் முதலியன.

வந்துசூழ நிரைத்தவையிரு நூறுகான்மணி மண்டபத்
தெந்தையார்திரு வருளையுன்னி யிருந்து சேவையர் காவலர்
செந்தமிழ்த்தொடை யால்விளங்கிய திருவிருத்த நிருத்தனுர்
தந்தசொன்முத லாவெடுத்தனர் தாணுவான புராணநூல். 35

(இ-ள்): சூழ் நிரைத்தவை யிருநூறு கால்மணி மண்டபத்து வந்து; சுற்றிலும் நிறைந்துள்ள ஆயிரக்கால் மண்டபத்தின்கண் வந்த; எந்தையார் திருவருளை யுன்னியிருந்து-சிவபிரான் திருவருளை நினைந்து வீற்றிருந்து; சேவையர் காவலர்-சேக்கிழார் நாயனர்; செந்தமிழ்த் தொடையால் விளங்கிய திருவிருத்தம்-செவ்வியதமிழ் மாலையால் விளக்கமுற்ற திருவிருத்தத்தை: நிருத்தனுர் தந்த சொன் முதலா-நடேசப்பிரான் எடுத்துக் கொடுத்தருளின சொல்லை முதலாக கொண்டு; எடுத்தனர் தாணுவான புராணநூல்-நிலைபேருன புராணஞ் செய்யத் தொடங்கினர். (எ-று). இம்மூன்றும் குளகம்.

வேறு

திருமறையோர் புராணமவை பதின்மூன்று சிவவே
தியரரனை வழிபட்ட புராணமோ ரிரண்டு
குரைகழன்மா மாத்திரரொன் றறுவர்முடி மன்னர்
குறுநிலமன் னவரைவர் வணிகர்குலத் தைவர்
இருமைநெறி வேளாளர் பதின்மூவ ரிடையர்
இருவர்சா லியர்குயவர் தயிலவினை யாளர்
பரதவர்சான் ருர்வண்ணர் சிலைமறவர் நீசர்
பாணரிவ ரோரொருவ ராம்பகருங் காலே. 36.

(இ-ள்): பகருங்கால்-சொல்லுமிடத்து; திருமறையோர் புராணமவை பதின்மூன்று-(அடியார் அறுபத்தொன்பதின்மருள்) வைதிக மறையவர்களாகிய அடியார் புராணம் பதின்மூன்று; சிவவேதியர் அரனை வழிபட்ட புராணமோரிரண்டு-சிவபிரானுக்குத் தொண்டு செய்து முத்திபெற்ற ஆதிசைவ மறையவர் புராணம் இரண்டு; குரைகழன் மாமாத்திரரொன்று-சத்திக்கா நின்ற வீரகண்டையணிந்த மாமாத்திர ரென்னும் மறையவர் குலத்தடியவர் புராணம் ஒன்று; அறுவர் முடி மன்னர்-அரசவமித்தராகிய அடியார் புராணம் ஆறு; குறுநில மன்னவரைவர்-குறுநில மன்னவராகிய அடியார் புராணம் ஐந்து; வணிகர் குலத்தைவர்-வணிகர் குலத்தினராகிய அடியார் புராணம் ஐந்து; இருமைநெறி வேளாளர் பதின் மூவர்-இம்மை மறுமைக்குரிய நல்லொழுக்கத்தையுடைய வேளாள மரபினராகிய அடியார் புராணம்

பதின்மூன்று; இடையரிருவர்-இடையர்குலத்தவராகிய அடியார் புராணம் இரண்டு; சாலியர் குயவர் தயிலவினையாளர் பரதவர் சான்றார்-சாலியர் குயவர் செக்கார் பரதவர் சான்றார்; வண்ணார் சிலை மறவர் நீசர் பாணர்-வண்ணார் வில்லையுடைய வேடர் நீசர் பாணர்; இவரோரொருவராம்-இம்மரபினராகிய அடியார் புராணம் தனித்தனி ஒவ்வொன்றும். (எ-று).

எனவே மரபறிந்தார் புராணம் ஐம்பத்தாறென உணர்க. ஏ-அசை. புராணமீரிரண்டு என்பது பிறழ்ந்த பாடம்.

அறுதிபெறத் திருமரபு குறித்துரையாப் புராண
மவைகளொரு பதின்மூன்று திருக்கூட்டந் தன்னின்
மறுவிலவர் பதியறிந்த கதையிரண்டு வந்த
மரபறிந்த கதையிரண்டு பேரறிந்த கதையொன்
றுறுமரபு தெரியாப்பு ராணமவை யோரே
ழூரறியாக் கதையேழு பேரறியாக் கதையெட்
டிறுதியிலக் கங்கண்ட திருக்கூட்ட மொன்றெண்
ணித்தனையென் றறியாத திருக்கூட்ட மெட்டே. 37

(இ-ள்): அறுதிபெறத் திருமரபு குறித்துரையாப் புராணமவைகளொரு பதின்மூன்று-நிச்சயித்து மரபினைத் தெரிந்து சொல்லப்படாத அடியார் புராணம் பதின்மூன்று; திருக்கூட்டந்தன்னின் மறுவிலவர் பதியறிந்த கதையிரண்டு-தொகையடியார்களில் குற்றமற்ற அவரது நாடறிந்த புராணம் இரண்டு; வந்த மரபறிந்த கதையிரண்டு-அவர் திருவவதாரஞ்செய்த மரபுதெரிந்தபுராணம் இரண்டு; பேரறிந்த கதையொன்று-அவர் திருப்பேர் தெரிந்த புராணம் ஒன்று; உறுமரபு தெரியாப்புராணமவை யோரேழு-அவதரித்த மரபறியப்படாத அடியார் புராணம் ஏழு; பேரறியாக் கதை யெட்டு-அவர்கள் திருப்பேர் தெரியாத புராணம் எட்டு; இறுதியிலக்கங்கண்ட திருக்கூட்டமொன்று-முடிபுத்தொகை கண்ட திருக்கூட்டத்து அடியார் புராணம் ஒன்று; எண்ணித்தனையென்றறியாத திருக்கூட்டமெட்டு-இவ்வளவென்று எண்ணிக்கையறியப்படாத திருக்கூட்டத்தடியார் புராணம் எட்டு.(எ-று). ஏ-அசை.

தில்லைவாழ்ந்தணர் புராணமும் திருவாரூர்ப் பிறந்தார் புராணமும் பதியறிந்த கதையென்றும், தில்லைவாழந்தணர் புராணமும் முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார் புராணமும் மரபறிந்த கதையென்றும், கபிலர் பரணர் முதலாக நாற்பத்தொன்பதின்மருக்கும் பெயர் கூறப்படுதலில் பொய்யடிமையில்லாத புலவர் புராணம் பேரறிந்த கதையென்றும், மேற்குறித்த மரபறிந்த தொகையடியார் புராணம் இரண்டு நீக்கி ஏனைய தொகையடியார் புராணம் ஏழும் மரபறியாக் கதையென்றும், மேற்கூறிய பதியறிந்தகதை இரண்டு நீக்கி ஏனைய தொகையடியார் புராணம் ஏழும் ஊரறியாக் கதையென்றும், பொய்யடிமை யில்லாத புலவர் புராணம் நீக்கி ஏனைய தொகையடியார் புராணம் எட்டும் பேரறியாக் கதையென்றும், தில்லைமூவாயிரவர் எனத் தொகை கூறப்படுதலின் அவர் புராணம் இறுதியிலக்கங்கண்ட புராணம் என்றும் ஏனைய எட்டும் தொகை காணாமையின் எண்ணித்தனை யென்றறியாத திருக்கூட்டமெனவுங் கொள்க. கடைச்சங்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்று இலக்கங்கூறப்படுதலின் அவரை இலக்கங்காணாத் தொகையோடு சேர்த்த தென்னெனின்: ஆண்டு சங்கமிருந்தாரேயன்றி அச்சங்கத்துச் சிவபிரான்மேல் பலபாடற்றிரட்டைப்பாடி அரங்கேற்றிய புலவரும் அடங்கலில் தொகைகூற அமையாமையினென்க.

தில்லைமறை யோர்கலயர் முருகர்பசு பதியார்
சிறப்புலியார் கணநாதர் பூசலைசண் டேசர்
கல்விநிறை சோமாசி மாறர்நமி நந்தி
கவுணியனு ரப்பூதி நீலநக்கராகச்
செல்வமறை யோர்காதை பதின்மூன்று சிவவே
தியர்காதை யிரண்டுபுகழ்த் துணையார்முப் போதும்
வல்லபடி சிவனையருச் சிப்பார்கண் மாமாத்
திரர்மரபிற் சிறுத்தொண்ட ரொருவர்முடி மன்னர். 38

(இ-ள்): தில்லைம்மறையோர் கலயர் முருகர் பசுபதியாளர்-தில்லைவாழந்தணர்கள் கலயநாயனுர் முருகநாயனுர் உருத்திர பசுபதி நாயனுர்; சிறப்புலியார் கணநாதர் பூசலை சண்டேசர்-சிறப்புலி நாயனுர் கணநாத நாயனுர் பூசலைநாயனுர் சண்டேச நாயனுர்; கல்விநிறை சோமாசி மாறர் நமிநந்தி-ஞானமிக்க சோமாசி மாற நாயனுர் நமிநந்தியடிகள்; கவுணியனுர் அப்பூதி நீலநக்கராக-திருஞானசம்பந்த சுவாமிகள் அப்பூதியடிகள் நீலநக்கநாயனுரென்னும்: செல்வமறையோர்காதை பதின்மூன்று-செல்வமிக்க மறையவர் குலத்து அடியவர் புராணம் பதின்மூன்று; புகழ்த்துணையார் முப்போதும் வல்லபடி சிவனையருச்சிப்பார்கள்-புகழ்த்துணை நாயனுர் தகுந்தவாறு திரிகாலங்களிலும் சிவபிரானை அருச்சனை செய்கின்ற முப்பொழுதுந் திருமேனி தீண்டுவாராகிய; சிவவேதியர் காதை இரண்டு-ஆதிசைவ மறையவர் மரபில் திருவவதாரஞ் செய்தருளிய சிறுத்தொண்ட நாயனுர் புராணம் ஒன்ரும். (எ-று).

அறுவரெவ ரவர்செங்கட் சோழர் புகழ்ச்சோழ
ரருண்மானி யிடங்கழியார் நெடுமாறர் சேரர்
குறுநிலமன் னவரைவர் நரசிங்க முனையர்
கூற்றுவனுர் கழற்சிங்கர் மெய்ப்பொருளை யடிகண்
முறைமைவணி கரிலைவர் காரைக்கா லம்மை
மூர்த்திகலிக் கம்பரமர் நீதியியற் பகையார்
திறமைபுரி வேளாளர் பதின்மூவர் மூர்க்கர்
செருத்துணையார் வாயிலார் கோட்புலியார் சத்தி, 39

(இ-ள்): முடிமன்னரறுவரெவரவர்-மகுடந்தரித்த அரச ராறுபேர் யாவரெனில்; செங்கட்சோழர் புகழ்ச்சோழர்-கோச்செங்கட் சோழ நாயனுர் புகழ்ச்சோழ நாயனுர்; அருண்மானியிடங்கழியார் நெடுமாறர் சேரர்-அருள் நிறைந்த மானியார் இடங்கழி நாயனுர் நின்றசீர் நெடுமாற நாயனுர் சேரமான் பெருமாள் நாயனுர் ஆகிய இவர்கள்; நரசிங்க முனையர் கூற்றுவனுர்; கழற்சிங்கர்-நரசிங்கமுனையரையர் கூற்றுவநாயனுர் கழற்சிங்க நாயனுர்; மெய்ப்பொருளையடிகள்-மெய்ப் மெய்ப்பொருள் தாயனுர் ஐயடிகள் காடவர்கோன் நாயனுர் ஆகிய; குறுநிலமன்னவரைவர்-குறுநில மன்னவர் புராணம் ஐந்தாம்; காரைக்காலம்மை மூர்த்தி கலிக்கம்பர்-காரைக்காலம்மையார் மூர்த்தி நாயனுர் கலிக்கம்பநாயனுர்; அமர்நீதியியற் பகையார்-அமர்நீதி நாயனுர் இயற்பகை நாயனுராகிய; மிறைமை வணிகரிலைவர்-ஒழுக்கமுடைய வைசியர்புராணம் ஐந்தாம்; திறமைவிரி வேளாளர் பதின் மூவர்-வல்லமையுடைய வேளாளர்கள் புராணம் பதின்மூன்று (அவை எவையெனின்;) மூர்க்கர் செருத்துணையார் வாயிலார்- மூர்க்கநாயனுர் செருத்துணை நாயனுர் வாயிலார் நாயனுர்; கோட்புலியார் சத்தி-கோட்புலி நாயனுர் சத்திநாயனுர். (எ-று).

மேற் செய்யுளி னிறுதியிலுள்ள முடிமன்னரென்றதை ஈண்டுக் கூட்டி யுரைக்கப்பட்டது. (தொடரும்)

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருமந்திரம்—1.

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

[திருமந்திரப் பாடலுள் வேறுபட்ட பாடங்களை நூலிற் கொண்டு, உண்மைப் பாடங்களை அடிக்குறிப்பிற் பாடபேதமாகக் காட்டியுள்ள சமாசப்பதிப்பினை ஆராய்ந்தனம். எம் மாணுக்கரும், சிவபூஜாதுரந்தரரும், திருவாசகம்; திருமந்திரம், திருக்குறள் மூன்றற்கும் உரையாசிரியரும் ஆகிய சைவத்திருவாளர், குரு. வரதராஜப்பிள்ளை, பி.ஏ., அவர்கள் மே. 21 முதல் 30 முடியப் பத்து நாள் உடனிருந்து ஆராய்ந்தார்கள். அதன் பயனாக இக்கட்டுரை எழுதப்பட்டது.]

2746, 2754 இரண்டனையும் நோக்கியுணரின், இவ்வானின் இலங்கை என்றிருப்பது பிழை என்றும், இமவானிலங்கை எனலே உண்மைப் பாடம் என்றும் புலப்படும். 2291, 2499, 2711 முதலாய பாடல்களை நோக்கின், 'ஓதிய நம மலம்' (2712) என்றிருப்பதே உண்மை எனல் தெளிவுறும். நம் எனக் கொண்டது அறியாமையே. அடுத்த திருப்பாடலில் அவ்வீரெழுத்தும் தவிர்த்து மூன்றெழுத்தே கூறிய உண்மையையும் நோக்குதல் வேண்டும். அடுத்து (2713) 'நமாதி' என்றதும் நோக்கத்தகுவது.

1448. கிரியைக்கு உருவம்; யோகத்திற்கு அருவம். ஞானத்துக்கு உருவம், அருவுருவம், அருவம் மூன்றும் இன்றி ஞேயத்து வழிபாடே உரியது என்னும் மெய்ந்நிலையை உணர்த்துகின்றது. அதைப் பிழைபட வைத்து, அருவம் என்றது பருவம் என்றும், தெரியுமருவத்து என்றிருந்ததைத் தெரியும் பருவத்து என்றும் கொண்டனர். கிரியை யோகங்கள் என இரண்டனையும் சேர்த்ததால் ஆயபன்மை. அது குற்றம் அன்று. 'கிரியா யோகங்களைச் செய்துழி' எனச் சிவஞானபோதத்துரையுளும் உளது.

சரியைத் திறம் 1450, 1845 இரண்டனையும் நோக்கித் திருத்திக் கொள்ளுதல் நன்று. மலசுத்தி, சிவமந்திரசுத்தி, கலாசுத்தி, (ஞானமாணுர்க்கு) அபிடேகம் நான்கும் சமயதீக்ஷைக்குரியன இத்திறம் என்றலின், பல சுத்தி ஆகாது. கிரியை 1508, யோகம் 1466. ஞானம் 1476 இவற்றை ஒருங்குவைத்துணர்தல் வேண்டும். 1451. இனமலர் என்றதை இன் அமலர் என்று பிரித்தது பெரும்பிழை. இனமலர்க் கொத்து என்றே கோடல் வேண்டும். 1432 "மாசற முன்னைப் பழமல மூலத்தை விட்டுன்னத்தகும்" எனக் கயிலாய சித்தருரை (பக்கம். 3.) குறிக்கின்றது.

2191. ஈசன் நல்வித்தை என்றதை ஈசன் அனல் வித்தை எனப் பிரித்தது பிழை என்று முற்பாட்டே காட்டும். 1876. நேர் என்று பிரித்தல் வேண்டும். ஏர் எனப்பிரித்தது பொருந்துமோ? 2161. ஏர் என்று பிரித்தற்குரியதை நேர் எனப் பிரித்ததும் அது போலும் திறனே.

'யதிகொண்ட சாக்கி யதியின் வடிவாம் எனற்பாலது, தமிழில் யகரம் மொழி முதலாகாமையின், எதிகொண்ட சாக்கி யெதியின் வடிவாம் என்று அமைந்தது. பின் ஈரடியிலும் 'எதி' (அடியர்) என்றே இருந்தது. அது பட்ட பாட்டைப் பார்மின். சதிகொண்ட சாக்கி யெரியின் வடிவாம். எரிகொண்ட ஈசன் எழில் வடிவாமே. யதிராசன் என்பதை எதி ராசன் எனல் தெரிந்ததே, அடியர் சிவனைத் தம்முள் உடையராதலின், சிவனுக்கு அடியர் வடிவம். சாட்சி-சிவம். அச்சிவம் எதியின் உயிரா யிருப்பினும், எதியின் வடிவாகும்.' எதியோ ஈசன் வடிவாவன். இதற்கு விளக்கம் எழுதப்புகின் விரியும். "இவர் தேவர் அவர் தேவர் என்று சொல்லி இரண்டாட்டா தொழிந்து ஈசன்றிறமே பேணிக் கவராதே தொழும் அடியார் நெஞ்சினுள்ளே கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே" என்று சொல்வேந்தர் அருளிய உண்மையாலுணர்க. முன்னீரடியிலும் உள்ள உவமையைக் கூர்ந்துணர்வார்க்கு நன்கு விளங்கும்.' அஃதாவது.

"கதிர் கண்ட காந்தம் கனலின் வடிவாம்
மதிகண்ட காந்த மணிநீர் வடிவாம்" (1653)

என்பது.

2403. மறையாளர் சோகம் என்பர். சைவசித்தாந்தத்தோர் சிவோகம் என்பர் என்னும் கருத்துள்ளது.

மன்னிய சோகமாம் மாமறையாளர்தம்
சென்னிய தான சிவோகமாம் ஈதுஎன்ன
அன்னது சித்தாந்தம் ஆம் மறை யாய்பொருள்
துன்னிய ஆகம நூலெனத் தோன்றுமே.

வேதாகமம் இரண்டும் முறையே சோகம் என்றும் சிவோகம் என்றும் உணர்த்தும் என்ற உண்மை தெரியாமல், இதில் சிவயோகம் இருக்க நேர்ந்தது.

2402. த்வம்-நீ. தத்-சிவம். அசி-ஆனய். த்வம்-உயிர். தத்-பரன். உயிர்-த்வம். சிவனை-தத்(+ஐ) அயர்வற்று அறி த்வம் தத் அசி என்ற கருத்துடைய திருமந்திரப் பாடலில், உயிர் என்றது, உயர் என நிற் கின்றது. சிவனுக்கு அடையாதலின் குற்றம் இல்லை. இன்றேனும், அயர்வற்று அறிதல் வினைக்கு முதல் உயிர் என்றமைந்தமையால், உயிர் சிவனை அயர்வற்று அறியும் பொருட்டே அது என நன்கு புலனாகும்.

அளவுட் படாத பிழைகளை ஒருசேரக் காட்டல் இயலாது. புலவர் சிற்சிலர் எம்முடன் இருந்து ஆராய்ந்து உதவின், திருமந்திரத்தை உண்மையுருவில் ஓதியுணரலாம்.

ஒன்பதாவது தந்திரத்தில், குருமட தரிசனம், ஞானகுரு தரிசனம் என்னும் இரண்டும் அடுத்துக் காணப்படுகின்றன. 'குருமடங்கண்டவர் மலரடி சார்ந்து நின்ருர்.' என்றுணர்த்திற்று. தமிழகத்திலே குருமடங் கண்டவர் அத் திருவடிச் சார்புற்ருரோ? இப்படி வினவலாம். இதற்குத் தக்க விடையுண்டு. குருமடம் சீடனே. கண்ணுக்குத் தெரிய அமைந்த கட்டடம் அன்று. இவன் (-சீடன்) குருவுக்கு இல்லம் (-மடம்). அக் குருவுக்குத் திருக்கயிலேயில் இல்லம் இல்லே. திருக்கயிலேயில் சிவனுக்கு மட்டும் இல்லம் உண்டு. குருவுக்குச் சீடன் அன்றி வேறு இல்லம் இல்லே.

'இவன் இல்லம் அல்லது சிவனுக்கு அங்குஇல் இல்லே' என்றலே உண்மைப்பாடம். அவனுக்கு என்றிருத்தல் வேண்டும். அவனுக்கு இவன் இல்லம் என்று என்று (பன் முறை என்றவாறு) அறிந்திருந்தும், அவனைப் புறம்பு (வெளி) என்பர் மடவர். அரற்றுதல் மூடர் வினே. அகம்புள்ள குருவைப் புறம்பென்பது அறிவாகாது. இவ்வுண்மையைப் பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் உணரார். போதமாம் மெய்யிரண்டும் காண்டல் வல்லார்க்கே குருமடம் காண்டல் எளிதாகும். ஆகவே, காண்டலருமை தோன்றக் 'கண்டவர்' என்ருர். 'கண்டவர்' என்றதன் குறிப்பை உணர்தல் இன்றியமையாதது. அகம்புள்ள குருவைப் புறம்பென்று அரற்றுதல் அறிவர் செயலன்று. அகமுகம். சகமுகம் என்று (2654) பின்வருவனவும் காண்க.

1482, சன்மார்க்கத்தார்க்கு முகத்தொடு பீடமும்
சன்மார்க்கத்தார்க்கும் இடத்தொடு தெய்வமும்
சன்மார்க்கத்தார்க்கு வருக்கம் தரிசனம்
எம்மார்க்கத்தார்க்கும் இயம்புவன் கேண்மினே

என்ற நாயனர், இயம்பிய இடம் திருமந்திரத்தில் எங்குளது ஏன்று தேடிக் காண்டல் அரிதாயிற்று. ஆயினும் அவ்வருமையைத் தனிக் கட்டுரையாக எழுதி உணர்த்தல் வேண்டும். இதில் இடங் கொள்ளாது.

2653. முகம் பீடம் என்பது உம்மைத் தொகை. மேல் முகத்தொடு பீடம் என்றதறிக. இடத்தொடு தெய்வம் என்றதால், (2653இல்) தேயம் என்றது உண்மைப் பாடமோ? வருக்கம், தரிசனம் இரண்டும் அகம் பரவருக்கம், ஆசில் செய்காட்சி எனவும் (2678) வருக்கம் சகமாம் என்றும் 2679 தரிசனம், மலே சித்தம் 2680 துவாதசகலாப் பிராசாத போகம் முதலியன பின்னர் ஆங்காங்குக் கூறப்பட்டன.

எல்லாவுலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலான்
எல்லாரும் உய்யக் கொண்டிங்கே யளித்தலால்
சொல்லார்ந்த நற்குருச் சுத்த சிவமே. (1576).

அறியாமை யுண்ணின் றளித்ததே காணுங்
குறியாகி நீங்காத கோ.

உ

வருக! இராமேஸ்வரம்

இராமேசுவரம் தீவில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில் மனம் கவரும் புராதன சிற்பக்கலைக் காட்சிகளுடனும், மிகப்பெரிய பிரகாரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. இராமாயண வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ள இத்தலம் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்றாக விளங்குவதுடன், வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் என இந்துக்களுக்குத் தலைசிறந்த இரு பெரிய புண்ணிய தலங்களாகும்.

இத் திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சேவார்த்திகள் வசதியாகத் தங்கவும், முறையாக வழிபடவும், இங்கு முக்கிய மாகக் கருதப்படும் இலக்குமண தீர்த்தம், தனுஷ்கோடி, கந்தமாதன பர்வதம் முதலான இடங்களுக்குப் போவதற்கு வசதியும் இக்கோயில் நிர்வாக அதிகாரியை அணுகுவதன் மூலம் அடையலாம்.

இக்கோயிலில் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் ஒன்றுக்கு ரூ. 10/– வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும், வெள்ளிக் காசும் பெறலாம்.

இக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப்பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேணுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம்,
தமிழ்நாடு.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில்.

புலம் வென்ற புண்ணியர்

புலவர் இ. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., டிப். மானிடவியல்.,
தமிழ் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம்

வேட்கையும் விருப்பமும் மனிதனையே - ஏன் உலகினையே ஆட்டிப் படைக்கும் சுழற்காற்று; சூருவளி. பொருள் வேட்கை, பொன் வேட்கை, மண்வேட்கை-பற்றற்றவனையும் பற்றித் தொல்லைதரும் நச்சரவம். அந் நச்சரவத்திற்கு மேலும் மேலும் பாலூற்றி வளர்ப்பது ஆசை மனமே. அறத்தை அழிக்கத் தொடங்கும் அழிபொருள் எனத் தெரிந்தும் அதனை வெறுக்க முடிவதில்லை. 'நம்மையும் அழிக்கும்' என நன்ருகத் தெரிந்திருந்தும் நாம் அதனை விட்டு அகல இயல்வதில்லை. ஆசை மிகுதியாக மிகுதியாகப் பிறர் பொருளைக் கவர வேண்டும் என்ற தீராவிருப்பு–தணியா வேட்கை– மனிதனை எப்படி யெப்படி யெல்லாமோ அலைக்கழிக்கிறது; எதை எதையெல்லாமோ செய்யத் தூண்டுகிறது. நீதி நூல் கற்றவனையும் நேர்மையை விட்டு நிலைகுலையச் செய்கிறது. திருடியேனும் தன் தாகத்தை-அந்த ஆசை வேகத்தை-பிறர் பொருளை விரும்பும் அப்பேதைமையைச் செய்ய விழைகிறது இப்பேதைமனம்.

"ஆசை அறுமின்கள்-ஆசை அறுமின்கள்
ஈசனே டாயினும் ஆசை அறுமின்கள்"

என்பது திருமூலரின் தெய்வத் தாரகமந்திரம். 'வேண்டாமை யன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை' என்பது திருக்குறளின் தனிக்குரல்.

பொருளுலகை-இப்பொய்யுலகை வெறுத்து அருள் உலகை நாடிய அருள்ஞானிகளின் புனிதமொழியும் 'ஆசையறுமின்' என்பதே. துன்பத்திற்கு மூலகாரணம் ஆசையே என்ருர்கள்-முழுவதும் துறந்து முற்றுணர்ந்த அருள் ஞானிகள்.

ஆசை கொள்ளுதல்-பிறன் பொருளை விரும்பி எவ்வாறேனும் கவர முயலுதல்-நல்லறமன்று. எனவே தான் இல்லறவியலில் வள்ளுவர் வெஃகாமையைக் கூறினர்.

நீர்வேட்கையால் வருந்திச் சாவநேரினும், ஆவிற்காக இரத்தல் தீது என்ற வள்ளுவப் பெருந்தகை பிறர் பொருளைக் கவர்தலையும் தீதெனவே வலியுறுத்துகின்ருர். 'ஐயோ! நான் வறுமையால் வாடுகின்றேன்; பசி பிறர் பொருளைக் கவர்தற்கு என்னைத் தூண்டுகின்றதே! நான் என்ன செய்வேன்?' என்று தன் வறுமைச் சூழலில் புலம்பும் ஒருவனுக்கும் வாழ்வுப்பாதையினைக் காட்ட விழைந்தவர் வள்ளுவர்.

"வறுமையே வந்தாலும் பிறர் பொருளை விரும்பாதே. ஐம்புலன் களையும் வென்ற அறிவுடையோர் செயல் அதுவே" என்பது தமிழ்மறை

தந்த வள்ளுவரின் தனிக் கொள்கையாகும். சிறப்பு மிக்க சிந்தனையாளரான கன்பூசியசும், 'பட்டினியால் வாடுகின்ற மாண்புமிகு மனிதன், ஒருவேளை உணவு கிடைக்கிறது என்ருல் கூட அதற்காக அவன், தான் வாழ்வாங்கு வாழநினைத்த-பண்பாடு நிறைந்த அந்த உயர்ந்த அறநெறி வாழ்வினின்றும் சற்றேனும் பிறழமாட்டான்' என்று கூறுவதும் கருதத்தக்கது.

புலனடக்கம் இல்லாத காரணத்தால் பிறர் பொருளை விரும்பிச் சிறிய இன்பத்தைப் பெற மனம் அலையும். ஆனல் புலன்களை வென்ற குற்றமற்ற அறிவுடையோர், வறுமையுள்ள காலத்திலும், 'நம்மிடம் பொருள் இல்லையே' என்று கவலையுற்ற காலத்திலும் பிறர் பொருளை விரும்ப மாட்டார்கள்.

இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்

என்பதே வள்ளுவர் வழங்கும் வான்மறையாகும்.

தனிமனித ஒழுக்கத்திற்கு மட்டுமேயன்றி நாட்டு ஒழுக்கத்துக்கும் இக்குறட்பா நல்ல அமுதமாக விளங்குகிறது. பிறர்நாடு விரும்பும் பேராசையாளர்க்கும் இக்குறட்பாக் கருத்துப் பெரிதும் பொருந்தும். இக்குறட்பாவினை மனத்திலிருத்தி ஒழுகினல் அனைவருமே 'புலம் வென்ற புண்ணியர்'களாவோம்; புகழுக்குரியவர்களாவோம்.

வையத்து வாழ்வாங்கு வாழுதற்கு வழிகாட்டியாய்த் திகழும் வள்ளுவத்தின் ஒலி-ஒளி எங்கும் பரவுவதாகுக! நாடும் வீடும் நற்பயனடைவதாகுக!

மாவட்ட மாநாடுகள் தேதி மாற்ற அறிவிப்பு

1.	கோயம்புத்தூர்	18-5-74, 19-5-74
2.	சேலம்	19-5-74
3.	தருமபுரி	20-5-74
4.	மதுரை	24-5-74
5.	இராமநாதபுரம்	16-6-74
6.	தென்ஞர்க்காடு	21-6-74
7.	வடஆர்க்காடு	22-6-74
8.	நீலகிரி	23-6-74
9.	புதுக்கோட்டை	11-7-74
10.	திருநெல்வேலி	13-7-74
11.	கன்னியாகுமரி	14-7-74
12.	திருச்சிராப்பள்ளி	21-7-74
13.	செங்கல்பட்டு	பின்னர் அறிவிக்கப்படும்
14.	தஞ்சாவூர்	பின்னர் அறிவிக்கப்படும்

சமயபோதனை

பாடம் 3 வினாக்கள் மே 1974.

வினாக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 31-5-1974க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. திருஞானசம்பந்தர் என்னென்ன திருத்தொண்டுகளைச் செய்தார்?
2. "நிறுத்திடும் நினைந்த மேனி நின்மலன் அருளினாலே" விளக்குக.
3. பெரிய புராணத்தின் பெருமைகளைக் கூறுக.
4. அட்ட வீரட்டானங்கள் எவையெவை? அத்திருத்தலங்களில் சிவபெருமான் நிகழ்த்திய வீரச்செயல்கள் என்னென்ன?
5. முப்புரம் செற்றதன் தத்துவப் பொருள் என்ன?
6. சேக்கிழார் பெருமானின் நன்றியுள்ளத்தை எவ்வாறு அறியலாம்?
7. இராமானுசரின் நன்றியுள்ளம், பணிவு இவற்றை எங்ஙனம் அறியலாம்?
8. சேக்கிழார் பெருமான் தில்லையில் திருத்தொண்டர் புராணம் எழுதத் தொடங்கிய நிகழ்ச்சியை எழுதுக.
9. எதனைக் கண்டு சிவனடியார்கள் "அர" ஒலி எழுப்பினார்கள்; இமையவர் ஆர்த்தனர்; மலர்மழை பொழிந்தது?
10. சோமாசி மாற நாயனார் எவ்வெந்நெறிகளைப் போற்றினார்?

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்:—

"அருளோசை"
தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
ஆழ்வார்பேட்டை,
சென்னை-600018.

திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு சிறப்பு மலர் 4-00

[திருக்குறள் 2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட நூல். மனிதன் எவ்வளவோ முன்னேறி நாகரிகங்களையும் பண்பாடுகளையும் வளர்த்துக் கொண்ட இந்நாளிலும் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கருத்துக்கள் அமைந்த நூல். நூலின் சிறப்பு குறித்தும், நூலாசிரியரின் நுண்ணறிவு குறித்தும் தமிழாய்ந்த அறிஞர் பெருமக்கள் பல கோணங்களில் ஆய்ந்து கண்ட நாற்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் கற்பார் சிந்தைக்கு விருந்தளிக்கின்றன. தமிழ் இலக்கியத்தில் ஆர்வமுடையவர்கள் அனைவரும் படித்துப் பயன் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் வெளியிடப்பட்ட அடக்க விலைப் பதிப்பு நூல் இது. 5 ரூபாய் விலையுள்ள இந் நூல் தற்போது நான்கு ரூபாய்க்குக் கிடைக்கும்.]

திருஞானசம்பந்தர் 1-00

[சிறுவர்-சிறுமியர்க்குச் சமயத் தலைவர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளை, பட விளக்கங்கள் கொண்ட பாடப் புத்தகமாக அச்சிட்டு வெளியிடுவதென்ற நோக்கத்தில் முதல் புத்தகமாக வெளிவந்துள்ளது இந்நூல். திருஞானசம்பந்தரின் வரலாற்று நிகழ்ச்சிகளைச் சித்திர வடிவில் மிகத் தெளிவாக இந்நூல் விளங்குகின்றது. சிறப்பாக அமைந்துள்ள வண்ண ஓவியங்கள் நூலுக்குச் சிறப்புத்தேடுகின்றன. ஞானசம்பந்தரின் வரலாறு குறித்து மாணவ-மாணவிகள் எளிய முறையில் அறிந்துகொள்ளும்பொருட்டு தமிழ் விளக்கமும் அதற்கேற்ப ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்ட இனிய நூல். எல்லோரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.]

பிற வெளியீடுகள்

அபிராமி அந்தாதி	0–15
விநாயகர் அகவல்	0–10
சிவபுராணம்	0–10

விவரங்களுக்கு

பேரவைப் பதிப்பகம்,

தமிழ்நாடு தெய்விகப் பேரவை,
9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600018.

சிவனடியார் வரலாறு

சோமாசிமாற நாயனுர்

சோழநாட்டில் திருவம்பர் என்னும் திருத்தலத்தில் சோமாசிமாறர் என்பவர் வாழ்ந்துவந்தார். இவர் தூய வாய்மைமிக்க மறையாளர் குலத்தவர். சிவனடியார்கள் வந்தால் பாதம் பணிந்து அமுதூட்டும் பண்பில் சிறந்தவர். இவர் "சிவ வேள்விகள் ஊழின் முறைமை வழுவாது உலகங்களான ஏழும் உவப்பப் புரிந்து இன்புறச் செய்த பேற்ருல் வாழும் திறம் ஈசன் மலர்க்கழல் வாழ்த்தல்" என்பார்.

எப்படிப்பட்டவராயினும் சிவனடியார் என்ருல் "அத்தன்மையார்தாம் நமை ஆள்பவர்" என்று கொள்வார். "சித்தம்தெளிய சிவபெருமான் அஞ்செழுத்து ஓதுதல் நித்தம் நியமம்" எனப்போற்றும் நெறியில் நின்ருர்.

சீரும் திருவும் பொழியும் திருவாரூர் எய்தி, வன்தொண்டராகிய சுந்தரரை அடைந்து, நண்பராகி, அவருடன் தங்கி, அவர் திருவடிபணிந்து, போற்றி துன்றும் புலன் ஐந்துடன் ஆறு தொகுத்த குற்றம் வென்று "இங்கிது நன்னெறி சேரும் விளக்கம்" என்றே ஆன சிறப்பு வாய்ப்ப என்றும் நிலவும் சிவலோகத்தில் இன்பம் உற்ருர். சொல்லார் சீர்ச் சோமாசிமாற நாயனுர் திருவடிகளை வணங்கி வாழ்வாம்.

—பழ-தரும-ஆறுமுகம்.

ஆனந்த ஆண்டு, வைகாசித்திங்கள் 13-ஆம் நாள் திங்கட்கிழமையன்று (27-5-74) சோமாசிமாறர் திருநட்சத்திரமாகிய ஆயிலியம்.